(2024-25-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2 )

SUBJECT CODE 24 PTM 416

REG.NO:

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : மே - 2026

எம். ஏ. தமிழ் இலக்கியம் — மதிப்பெண்கள் : 75

நான்காம் பருவம் — நேரம் : 3 மணி

# சங்க இலக்கிய ஒப்பீடு

## பகுதி – அ (10x1=10 மதிப்பெண்கள்)

பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (K1)

1. வனப்பு எத்தனை வகைப்படும்?

அ)10 ஆ)8 இ)6 ஈ)4

2. அறிவுடையோர் போற்றும் இலக்கிய நெறி எது?

அ)புராண நெறி ஆ)காப்பிய நெறி இ) புலனெறி வழக்கு ஈ) உலகியல் வழக்கு

3. அலங்காரக் கோட்பாட்டைக் கூறும் தமிழ் இலக்கண நூல் எது?

அ) நன்னூல் ஆ) யாப்பெருங்கலக் காரிகை இ) புறப்பொருள் வெண்பாமாலை ஈ) தண்டியலங்காரம்

4. பாரத முனிவர் நாட்டிய சாத்திரத்தில் குறிப்பிடும் அணிகள் எத்தனை ?

அ) நான்கு ஆ) ஐந்து இ) ஏழு ஈ) ஆறு

5. நாடக மாந்தர்களைக் குறிக்கும் சொல் எது?

அ) ஓஜம் ஆ) மாகர் இ) அபிநயம் ஈ ) உசிதம்

கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக. (K2)

6. சேக்சுபியரோடு பொருந்திக் காணப்படும் தமிழ் இலக்கியக் கோட்பாட்டைக் கூறுக ?

7. வடிவத்தில் பொருளை யாத்தமைப்பது எது?

8.திணை இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு கோட்பாட்டை முன் வைப்பவர்?

9. இலக்கிய வரலாற்றில் வகைகள் என்பன யாவை?

10. கிரேக்க இலக்கியத்தின் ஆதிகாவியங்கள் என்று கூறப்படுவன எவை?

## பகுதி – ஆ ( 5 X 5 = 25 மதிப்பெண்)

பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. **(K3)**

11. அ)தமிழ் மரபுவழி இலக்கியக் கொள்கைகள் பற்றி எழுதுக.

( அல்லது )

ஆ)திணை இலக்கியக் கொள்கைகளைக் குறிப்பிடுக.

(த.பி.பா.)

12. அ) வாய்மொழி இலக்கியப் பண்பு பற்றி எழுதுக.

( அல்லது )

ஆ) யாப்பு வடிவம் என்பன யாவை?

13. அ) அலங்காரக்கோட்பாட்டில் தோன்றும் சுவையைப் புலப்படுத்துக.

( அல்லது )

ஆ)தொனிக்கோட்பாடு பதித்துச் சென்றுள்ள சுவடுகளைத் தெளிவுபடுத்துக.

14. அ)அடிப்படை இலக்கிய வகைகளைக் கூறுக.

( அல்லது )

ஆ)தமிழில் இலக்கிய வளர்ச்சியினை எழுதுக.

15. அ)இயற்கைப் புனைவுப் பாடல்கள் என்றால் என்ன?

( அல்லது )

ஆ) கையறுநிலைப் பாடல்கள் இடம்பெறும் பாங்கினை எழுதுக.

**பகுதி – இ ( 5 X 8= 40 மதிப்பெண்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K4/K5)**

16. அ) சங்க இலக்கியக் கொள்கையில் காணலாகும் செய்தியினைத் தொகுத்துரைக்க.

( அல்லது )

ஆ)தமிழ் இலக்கிய அடிப்படைக் கொள்கைகளை விளக்கியுரைக்க.

17. அ) சங்க இலக்கியப் பொதுப்பண்புகளை விளக்குக.

( அல்லது )

ஆ) சங்க கால இலக்கிய வகைகளைத் தொகுத்தெழுதுக.

18. அ) அலங்காரக் கோட்பாடு, இரசக்கோட்பாடு ஒப்பீட்டாய்வு செய்க.

( அல்லது

ஆ) நெறிக் கோட்பாட்டினை விவரிக்க.

19. அ) தமிழும் இலக்கியவகைக் கோட்பாடும் விளக்கியுரைக்க.

( அல்லது )

ஆ)இலக்கிய வகைச் சிந்தனை குறித்து விளக்கி எழுதுக.

20.அ) வீரயுகப் பாடல்களின் தனித்துவத்தை விளக்கியுரைக்க?

( அல்லது )

ஆ)தன்னுணர்ச்சிப் பாடல்கள் உணர்த்தும் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

***ETHICAL PAPER***

******